DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.150/2025**

Prosecution **PW.1**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | குழந்தைவேல் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | துரைசாமி | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 71 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.07.2026
எதிரி ஆஜரில்லை. சட்டப்பிரிவு 355 BNSS படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம் மாயனரில் குடியிருந்து எலக்ட்ரிசியன் வேலை செய்து வருகிறேன். 2024ம் ஆண்டு 9 வது மாதம் 03ம் தேதி அன்று என்று நினைக்கிறேன். இரவு 08.30-09.00 மணியிருக்கும் மாயனூர் போலிஸ் ஸ்டேசனுக்கு கிழக்கே ஆசிரியர் பயிற்சி பள்ளி அருகில் மணவாசிக்கு வேலைக்கு போய்விட்டு வந்துகொண்டிருந்தேன். கும்பலாக இருந்தது ஒரு வெள்ளைக்கார் நின்று கொண்டிருந்தது. அங்குள்ளவாகளிடம் கேட்டேன் வெள்ளை கார் ஆக்சிடெண்ட் ஆகி ஒருவர்இறந்து போனதாக சொன்னார்கள். இறந்து போனவரை நான் பார்ப்பதற்கு முன்பே ஆம்புலன்சில் ஏற்றிச்சென்று விட்டதாக கூறினார்கள். வெள்ளைக்கார் நின்று கொண்டிருந்ததததை பார்த்தேன் அதை ஓட்டி வந்தவர் யார் என்று தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அனுமதி பெறப்பட்டு பிறழ்சாட்சியாக விளம்புகை செய்யப்படுகிறார்.**

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

1. கடந்த 09.03.2024 ம் தேதி இரவு 09.00 மணியளவில் நான் மாயனூர் அரசினர்உயர்நிலைப்பள்ளி அருகே சென்று கொண்டிருந்த போது எனக்குத் தெரிந்த பேபிசுகந்தியின் அம்மா பார்வதி என்பவர் திருச்சி –கரூர் மெயின் ரோட்டில் அரசினர் உயர்நிலைப்பள்ளி அருகே வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்று கொண்டிருந்தது அதே ரோட்டில் அதே திசையில் அவருக்கு பின்னால் வந்த TN 07 CQ 4690 என்ற Honda City IVtec காரை ஓட்டி வந்த பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்துகொண்டேன் சென்னையை சேர்ந்த அனுசியா என்பவர் அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டி வந்து பார்வதி மீது மோதி விபத்தை எற்படுத்தினார் என்றால் நான் விபத்தை பார்க்கவில்லை வண்டி நின்று கொண்டிருந்ததை பார்த்தேன்.

2. அடிப்பட்டவர்க்கு காயங்கள் ஏற்பட்டு தனியார்ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து பார்வதியின் மகள் பேபி சுகந்திக்கு தகவல் கொடுத்தோம் என்றால் இல்லை யார்என்று தெரியாது பார்க்கவில்லை. மேற்படி சங்கதிகளை நான் நேரில் பார்த்துவீட்டு போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு எதிரி கேட்டுக் கொண்டதால் பார்க்கவில்லை என்று அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/–திரு.ஆர்.பாக்கியராஜ்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.